# இராமாநுசரும் ஸோமாசியாண்டானும்

by
டாக்டர் மாடபூசி வரதராஜன்

இராமாநுசர் மேலுக்கோட்டையில் தங்கியிருந்த சமயம். ஸோமாசியாண்டான் என்ற பக்தரும் மேலுக்கோட்டையில் இருந்தார். திருநாரணனுக்கும் அவன் பக்தர்களுக்கும் கைங்கர்யங்கள் செய்துவந்தார். ஸோமாசியாண்டான் சிறந்த பக்தர் மட்டுமின்றி பெருமாள் இவர் பாட்டுக்கு நடனம் ஆடுவதும் இவருடன் பேசுவதும் உண்டு. எப்போதெல்லாம் ஸோமாசியாண்டான் பாடுவாரோ அப்போதெல்லாம் பெருமாள் மனித உருக்கொண்டு அவர் முன்பு ஆடுவார். இராமாநுசர் இந்த விஷயத்தைக்கேட்டு சிறந்த மேலுக் கோட்டையில் இப்படியும் ஒரு வைபவமா என்று அகமகிழ்ந்தார். சிறந்த பக்தனான ஸோமாசியாண்டானிடம் பெருமாளுக்குள்ள கருணையைக்கண்டு ஈடுபட்டார்.

இக்கலியுகத்தில் பெருமாளின் தெய்வப்பார்வை காண்பது மிக்க கடினம். மேலும் அவனுடன் பேசுவது மிகவும் கடினம். ஆனால் ஸோமாசியாண்டானுடன் பெருமாள் பேசுவதும், மனிதரூபமாக வந்து அவர் பாடலுக்கு ஆடுவதும் வியக்கத்தக்க செயலும் வெற்றியுமாகும். மிக்க பக்தியுடையவர்களாலும் கனவிலும் நினத்துப்பார்க்கமுடியாதது. இப்படிப்பட்ட ஒரு பக்தன் இருப்பதும் அவருடைய வியப்பான செயலும் கண்டு இராமாநுசர் ஆச்சர்யமடைந்தார். இந்த இருள்தருமா ஞாலத்தில் இப்படியும் ஒரு நிகழ்ச்சி நிகழ்வது கண்டு வியந்தார். ஸோமாசியாண்டானை வணங்கினார். தன்னுடைய உள்ளார்ந்த மரியாதையைச்செலுத்தினார்.

சில நாளைக்குப்பிறகு ஸோமாசியாண்டானைப்பற்றி மேலும் அறிந்தார் இராமாநுசர். இராமாநுசர் தாமே தனிப்பட்ட சிறந்த பக்தராகையாலே, பெருமாளுக்கும் ஸோமாசி யாண்டானுக்கும் நடக்கும் நிகழ்ச்சியை தம் கண்களால் கண்டார். குறிப்பிட்ட சூழ் நிலையில், இராமாநுசர் ஸோமாசியாண்டான் ஒரு பக்தவனாவதற்குரிய தேவையில் முழுமை பெறவில்லை என்பதையும், இந்த சரீரம் விட்ட பிறகு ஆத்மா பெறும் பேறான மோக்ஷம் அடைய இவருக்கு வழிஇல்லை என்றும் அறிந்தார். அதனால் இராமாநுசர் மனம் கலக்கமடைந்தார். இராமாநுசர் என்ன செய்வது என்று திகைத்து, ஸோமாசி யாண்டானிடம் வீடுபேறு பெற முழுமை பெறவில்லை என்று சொல்லிவிடலாமா என்று எண்ணினார். ஸோமாசியாண்டான் அவ்வூரில் வசிப்பவரானதாலும், தன்னைவிட வயதில் பெரியவரானதாலும், முதிர்ந்த பக்தராகையாலும், இராமாநுசருக்குக் குழப்பாயிருந்தது. இந்தக் குறையை எடுத்துச்சொன்னால் அவர் இராமாநுசரைக்கோபிக்க இடமுண்டு. இருப்பினும் ஒரு பக்தனின் ஆன்மீகக்குறையை எடுத்துக்காட்டுவது சரியானதல்ல என்று எண்ணி அவரிடம் சொல்லவில்லை..

பொதுவாக ஆன்மீகத்தில், நேர்மை, வெளிப்படையாகக்கூறல், கபடமற்றிருத்தல் முதலானவை அடிப்படை கொள்கைகள். ஒரு பக்தன் அனுபவம் நிறைந்தவனாய் வயதில் பெரியவனாய் இருந்தாலும் வயது, அறிமுகம் என்ற வரம்பு பாராமல் மற்றவர்களுடைய கருத்துக்களை எடுத்துக்கொள்ளவேண்டும். மூத்த பக்தர் என்பது வயது அடிப்படையிலோ மற்றவைகளாலோ இல்லாமல், கேவலம் அந்த பக்தன் இறை அருள் எவ்வளவு பெற்றுள்ளான் என்பதைக்குறிப்பதாகும். வயது நிறைந்த பக்தர்கள் வயது குறைந்த ஆசார்யர்களிடம் நுண் அறிவுத்திறனும் அருளும் நிறைந்தவர்களான சீடர்களாய் இருந்துள்ளனர் என்பது குருபரம்பரை முதலான நூல்கள் வாயிலாக அறியலாம்.

இருப்பினும் இராமாநுசர் குழப்பத்தில் இருந்தார். இந்த விஷயத்தில் என்ன செய்வது என்ற ஆழ்ந்த யோசனையில் இராமாநுசர் இருந்தபோது, பெருமாள் இராமாநுசரை ஸோமாசியாண்டானிடம் உள்ள குறையை அறிவித்து, முழுமையான பக்தனாகி வீடுபேறு தகுதிபெற்றுக்கொள்ளும்படி ஆணையிட்டார். . இராமாநுசரும் ஸோமாசியாண்டானிடம் குறையைச்சொல்லுவதன்றி வேறு வழியில்லை என்று உணர்ந்தார்.

ஆனால் செயல்படுவதைக்காட்டிலும் சொல்லுவது சுலபம். ஸோமாசியாண்டானிடம் எப்படி எடுத்துரைப்பது? இராமாநுசர் தெய்வத்தின் ஆணையை நிறைவேற்ற மிக்க அடக்கத்துடன் ஸோமாசியாண்டானை அணுகினார். ஸோமாசியாண்டோனோடு வேறு விஷயங்களை பேசிவிட்டு, இராமாநுசர் மிக்க மென்மையான குரலில் ஸோமாசி ஆண்டானைப்பார்த்துச்சொன்னார்: "ஸ்வாமி, நீர் பெருமாளிடம் பெரியபக்தராக இருக்கிறீர். நீர் தெய்வப்பாடலைப்பாடும்போது பெருமாளும் மனித உருவில் தேவரீர் முன்பு வந்து ஆடுவதாக அறிந்தேன். பெருமாளிடம்சம்பந்தமுடைய இப்படிப்பட்ட பக்தனை அடியேன் பார்த்ததில்லை. இருந்தாலும் அடியேனுக்கு ஒருசந்தேகம். அதனைப்பெருமாள்தான் தெளிவுபெறச்செய்வர். தேவரீர் பெருமாளிடம் நெருக்கமாக இருப்பதால், தேவரீர் பெருமாளிடம் கேட்டு பதிலைச்சொல்ல வேண்டுகிறேன்." இதனைக்கேட்ட ஸோமாசி யாண்டான் கர்வத்துடன் இருந்தார். பின்னர், மகிழ்ச்சியுடன் ஸோமாசியாண்டான் பதில்சொன்னார்: "தயவுசெய்து அந்த சந்தேகத்தை கூறுவீர். அடியேன் உடனே பெருமாளைக்கேட்டு விடை சொல்லுகிறேன்." இராமாநுசரும் மிக்க அடக்கத்துடன் சொன்னார்: "தயவுசெய்து பெருமாளிடம் எப்படி ஒருவன் இவ்உடல் இறுதியில் மோக்ஷம் அடைகிறான். மிக்க பக்தியானால் ஒருவன் அதைப்பெறமுடியுமா என்பதையும் தெரிவிக்க வேண்டுகிறேன்." ஸோமாசியாண்டானும் "உறுதியாக. ஏன்முடியாது? விரைவில் உமக்குச் சொல்லுகிறேன்" என்று சொன்னார். இந்த வார்த்தையைக்கேட்டதும் இராமாநுசர் அவ்விடத்தை விட்டுச் சென்றார்.

இந்த இடத்தில் கவனிக்க வேண்டியது என்னெனில், இராமாநுசர் "தயவுசெய்து பெருமாளிடம் தேவரீருக்கு மோக்ஷம் பெற தகுதி உண்டா" என்று கேட்கவில்லை. இருப்பினும் இராமாநுசர் வேண்டுமென்றே கேள்வியின் சொற்தொடரை அவ்வாறு இட்டார். ஸோமாசியாண்டான் பெருமாளுடன் நெருக்கமாக இருப்பதால் விடுதலைக்குத் தனக்குத் தகுதி இருப்பதாக எண்ணியிருந்தார். இராமாநுசர் அவரைப்பற்றி கேட்டிருந்தால் சந்தேகமில்லாமல் ஸோமாசியாண்டான் இராமாநுசரிடம் கோபம் கொண்டிருப்பார். மனிதர்களின் எண்ணங்களை மதிப்பிடும் இராமாநுசர், இந்தமாதிரி திறம் வாய்ந்த விஷயங்களில் மிகக்கூர்ந்த அறிவுடன் செயல்படுவார் எனவே, இவர் ஸோமாசி ஆண்டானிடமே மேற்கூறிய சந்தேகத்தைக்கேட்டார். இருப்பினும் ஸோமாசியாண்டன் கேள்வியை தவறாகப்புரிந்துகொண்டார். இராமாநுசர் ஸோமாசியாண்டானிடம் தனக்கு மோக்ஷம்பெற தகுதி உண்டா என்பதைப்பெருமாளிடம் கேட்கச்சொன்னதாக எண்ணினார்.

மறுநாள், வழக்கமாக ஸோமாசியாண்டான் கோவிலுக்குச்சென்றார். தன் வழக்கம் போல் தெய்வீகப்பாடலைப்பாடினார். பெருமாளும் தோன்றி ஆடலை நடத்தினான். பின்னர், ஸோமாசியாண்டான் பெருமாளிடம் கேட்டார்: "பெருமாளே! இன்று இராமாநுசன் என்ற பெயர் கொண்ட ஒரு பக்தன் ஒரு கேள்வி அடியேனிடம் கேட்டார். தனக்கு மோக்ஷமடைய தகுதி உண்டா என்பதை தேவரீரிடமிருந்து தெரிய விரும்பினார். தயவு செய்வு தெரிவிக்க வேண்டுகிறேன்". பெருமாள் சொன்னார், "என்னுடைய மிகப்பெரிய பக்தர்களுள் ஒருவரான இராமாநுசருக்கு ஏன் இந்த சந்தேகம் வந்தது? வெகு காலத்துக்கு முன்பே அவருக்கும் அவருடைய பெயரை அன்போடும் உரிமையோடும் சொல்லுபவர்களுக்கு இயல்பாகவே மோக்ஷம் பெற தகுதிபடைத்தவர்கள் என்று உறுதியாக்கப்பட்டது. இதனை தயவுசெய்து இராமாநுசரிடம் சொல்". .

மறுநாள், ஸோமாசியாண்டானை இராமாநுசர் சநதிக்கும்போது, ஸோமாசியாண்டான் இராமாநுசரை விளித்து, 'இராமாநுசரே! தேவரீர் மிகவும் அதிஷ்டமானவரும் நல்லாசி பெற்றவருமாவர். பெருமாள் தேவரீருக்கு மட்டுமின்றி, தேவரீர் பெயரை எவர்கள் உரிமையுடனும் அன்புடனும் சொல்லுகிறானோ அவர்களுக்கும் மோக்ஷம் பெற தகுதி என்று சொன்னார். எனவே, தேவரீர் இயல்பாக இரும். இனிமேல் தேவரீர் இதைப்பற்றி கவலை வேண்டாம்". இராமாநுசரும் தன்னை மறந்த நிலையில் கவனமாகக்கேட்டார். ஆனால், இவர் நினைத்தபடி செயல்கள் நடக்கவில்லை என்று ஏமாற்றமடைந்தார். பின்னர், தைரியத்தை வரவழைத்துக்கொண்டு இராமாநுசர் ஸோமாசியாண்டானை மிக்க தாழ்ந்த குரலில் கேட்டார்: "ஸ்வாமி, பெருமாளிடமிருந்து விடை கிடைதத்ததற்கு மிக்க நன்றி.

மேலும் அடியேனுக்கு சிறிய சந்தேகம் உள்ளது. அந்த கேள்வி முறைகேடாயிருப்பின் அடியேனை தயவுசெய்து மன்னிக்க வேண்டுகிறேன். தயவுசெய்து பெருமாளிடம் தேவரீருக்கு மோக்ஷமடைய தகுதி உண்டா என்று கேட்கவேண்டுகிறேன். ஸோமாசியாண்டான் வெறுப்பு காட்டும் நோக்கோடு எதிர்பாராத கேள்வியைக்கேட்டு எதிர் வாதம் கூறினார்: "அடியேனிடம் பெருமாள் நெருக்கமாக இருந்து அடியேன் பாடும் பாடலுக்கு மனித உருக்கொண்டு ஆடுவதும் செய்வதால் எப்படி அடியேனுக்கு மோக்ஷம் கொடுக்காமல் இருப்பான்? எப்படி அவன் இருப்பிடத்துக்கு அனுமதிபண்ணமாட்டான்? அடியேன் உறுதியாக இருக்கிறேன். பெருமாளுடன் நெருங்கி இருப்பதால் அடியேனுக்கு தடையின்றி மோக்ஷம் கொடுப்பார். இதில் எந்த சந்தேகமும் இல்லை". இருப்பினும் இராமாநுசர் பணிவுடன் வற்புறுத்தி, "ஸ்வாமி, பெருமாள் தேவரீருடன் நெருக்கமாய் இருப்பினும், அவரிடமிருந்து மோக்ஷம் காரணமாக உறுதிமொழி வாங்கிக் கொண்டால் நல்லதல்லவா? சுலபமாக முடியும்போது எதற்காக சந்தேகம்?" என்று கேட்டார். ஸோமாசி யாண்டானும் முதலில் மறுப்பு தெரிவித்தார். பின்னர் முடிவில் ஒப்புக் கொண்டார். .

அடுத்த நாள், வழக்கமாக இவர் பாடுவதும் அதற்கு பெருமாள் ஆடுவும் ஆன பிறகு, ஸோமாசியாண்டான் பெருமாளிடம் கேட்டார்: "பெருமாளே! அடியேனுக்கு மோக்ஷமடையத்தகுதி உல்ளது உண்மையல்லவா? என் சரீரம் முடியுமளவில் தேவரீர் இருப்பிடமான வைகுந்ததுக்கு சந்தேகமில்லாமல் வர அனுமதி உண்டல்லவா?" பெருமாள் புன்னகைடன் பதில் சொன்னார்: "இல்லை. மோக்ஷமடையத்தகுதி உறுதியாக உமக்கு இல்லை". ஸோமாசியாண்டான் அதிர்ச்சியடைந்தார். அவர் மூச்சுத்திணறிய குரலுடன், "எப்படி தேவரீர் அடியேனுக்கு மோக்ஷம்கொடுக்க மறுக்கமுடியும்? உமக்கு நெருங்கிய பக்தனல்லவா. எப்போதெல்லாம் அடியேன் பாடுகிறேனோ அப்போதெல்லாம் மனித உருக்கொண்டு தேவரீர் நாட்டியமாடுகிரீரில்லையா. இந்தமாதிரி மற்ற பக்தர்கள் யாரும் தேவரீருக்கு நெருக்கமாக இல்லையே. தேவரீர் அடியேனை இவ்வாறு செய்வது தகுமோ? பெருமாள் சொன்னார்: "ஆமாம். தேவரீர் அடியேனுடைய நெருங்கிய பக்தர். ஆனால் உமக்கு மோக்ஷமளிக்க விருப்பமில்லை. உம்முடைய பக்திக்கு ஏற்ப பாடியதற்கு முழுமையாக நான் ஆடி உம்மை சந்தோஷப்படுத்தினேன். ஆதலால் உமக்கு நான் கடமைப்பட்டவனல்லேன். எனவே, உமக்கு மோக்ஷம் கொடுக்கவேணும் என்ற நிர்ப்பந்தம் எனக்கு இல்லை".. மேலும் ஸோமாசியாண்டான் கேட்டார்: "பிறகு எப்படி இராமாநுசருக்கும் அவர் வழிவந்தவர்களுக்கும் மோக்ஷமளிக்க உறுதிகொண்டாய்?" பெருமாள் பதில் அளித்தார்: "இராமாநுசரின் விஷயம் முழுமையாக வேறுபட்டது. அவரிடம் தூய பக்தியும் என்னிடம் மிகப்பெரிய அளவான அன்பும் கொண்டதன்றி வேறு இல்லை. அவர் என்னிடம் வைத்த அன்பு எந்த ஒப்பந்தத்துக்கும் உட்பட்டதன்று. அவர் என்னிடமிருந்து எப்போதும் எதையும் எதிர்பார்த்ததில்லை. சொல்லப்போனால் நான் கொடுப்பதை எல்லாம் மறுத்துவிடுவார். என்னுடைய ஆசியையும் அருளையும் பெற மட்டுமே ஏங்குவார். எனவே, என்னையே அவருக்குக்கொடுத்தாலும், நான் திருப்தி அடையமாட்டேன்." ஸோமாசியாண்டான் பணிவுடன் கேட்டார்: "பின்னர் என் விதியைபற்றி என்ன?". பெருமாள் பதிலளித்தார்: "எல்லா உலகமும் தடையின்றி இராமாநுசரைப் பின்பற்றும்போது, உமக்கு அவரை அணுகுவதில் தகுதி உண்டல்லவா?" இப்போதுதான் உண்மைப்பொருள் ஸோமாசி யாண்டானுக்கு உதயமாயிற்று.

பகவத்கீதையில் கண்ணன் நான்கு விதமான பக்தர்களைச் சொல்லுகிறான். உலக இன்பங்களைப்பெறுவதற்காக வணங்குகிறவனை பக்தனாக இசைகிறான். அவர்களில் சிறந்த பக்தனை ஞானி என்று குறிப்பிடுகிறான். உண்மையான ஞானியானவன் பெருமாளிடமிருந்து எதையும் எதிர்பார்ப்பதில்லை. பொதுவாக, பெருமாள் பக்தர்களை பரீக்ஷிப்பான். பலவகையில் வரங்களைக்கொடுத்து ஆசைகாட்டுவான். பல பக்தர்கள் இந்த வலையில் வீழ்வர்கள். வரங்களை ஏற்பார்கள். அதனால் பெயர், புகழ், உலகில் விரைவில் செல்லுகின்ற சொத்து வந்து கிட்டும். பின்னர் கிடைத்த புகழினால் இன்பம் பெற முற்படுவர். கடைசி முடிவாக பெருமாளை அணுகுவதன் காரணத்தை மறப்பர்..ஒரு உண்மையான பக்தனான ஞானி எப்போதும் இம்மாதிரியான ஆசைகளுக்கு இடம் கொடுக்கமாட்டான். மற்றவர்களிடமிருந்தோ பெருமாளிடமிருந்தோ எதையும் எதிர்

பார்க்கமாட்டான். இதன் விளைவாக பெருமாள் இப்படிப்பட்ட பக்தர்களுக்குக் மிக்க கடமைப்பட்டவனாவான். முழுமையாக தன்னையே கொடுத்தும் பக்தனுடைய கடனைச்செலுத்த முடியாது வழக்காடுவான்.

இந்த நிகழ்ச்சியில், மேற்கூறிய பக்தர்களில் ஒருவரான இராமாநுசருக்கு முழுமையாகப் பெருமாள் கடமைப்பட்டிருப்பதையும், அதை மிகுந்த அளவு செய்ய முடியாமையையும் தானே கூறினார். இவ்வாறு, இராமாநுசர் முதன்மையான பக்தராக இருப்பதால் பெருமாளுடைய நன்றி அறிதலைக் காணமுடிகிறது.

ஸோமாசியாண்டான் தன் பாடலுக்குப் பெருமாள் ஆடுவது முடிவாகாது என்பதை உணர்ந்தார். பெருமாளிடம் தூய பக்தி கொண்டு எதையும் எதிர்பாராமல் இருப்பதே இறுதியான பேறு என்பது இவ்வுலகில் ஒவ்வொரு ஆத்மாவும் உணரவேண்டும். இதுதான் "ஸாத்ய பக்தி" என்று வேதாந்தத்தில் பரிபாஷை. இந்த பக்தி தான் எம்பெருமானை ஸாக்ஷாத்கரிக்க எல்லாவற்றிலும் தலைசிறந்த பேரின்பம். ஒருதடவை ஒரு பக்தன் இப்படிப்பட்ட பெருமாள் கடாக்ஷம் பெற்றால் மேனிமேலும் அவனைக்காணத்தூண்டும். இந்த வகையில் பக்தன் முழுமையான பக்தியும் உரிமையும் பெருமாளிடம் கொள்வது ஸாத்ய பக்தியாகும். இந்த ஸாத்யபக்தியைப்பெறுவதே ஒவ்வொரு ஆத்மாவின் குறிக்கோளாகும். இராமாநுசரின் பக்தி இந்த வகையைச்சேர்ந்தது. இதனால் பெருமாள் வசப்பட்டான். இவ்வாறு இராமாநுசர் உலகிலுள்ள எல்லா பக்தர்களுக்கும் எடுத்துக்காட்டாய் பின்பற்றும்படி இருந்தார். இதனை உணர்ந்த ஸோமாசியாண்டான் இராமாநுசரிடம் வந்து அவர் திருவடிகளில் சரணமடைந்தார்.

(இதுவரை ஸ்ரீ உ.வே. மேலுக்கோட்டை மண்டயம் அனந்தாண்பிள்ளை லக்ஷ்மிதாதாசார்ய ஸ்வாமி எழுதிய "ஸ்ரீ ராமாநுசர் வாழ்வும் தத்துவமும்" என்ற ஆங்கில நூலில் (2008) உள்ளபடி தமிழாக்கம் செய்யப்பட்டது).

(ஸோமாசியாண்டான் வைபவம் முழுமையாக கீர்த்திமூர்த்தி ஸ்ரீமான் உ.வே. எஸ்.கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார் ஸ்வாமி தொகுத்த ஆசார்ய வைபவ மஞ்சரி இரண்டாவது பாகத்தில் பக்கம் 109-122 வரை உள்ளதைப்படித்து பயன்பெறலாம்.)

பக்தாம்ருதம் மதுரகவிதாஸன்
6.12.12